OS.No. 232/2022

Date : 27.10.2025

Witness Name & Rank – அன்னபூரணி - PW1

சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் பள்ளிக்கூடம் சென்றதில்லை எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ளேன் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது எனது வீட்டுக்காரருக்கு தான் தெரியும், அவர் தயாரித்தார் நான் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். பிரதிவாதிகளின் தந்தை என சுப்பிரமணியத்தை எனக்கு எப்போது முதல் தெரியும் என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். நான் எனது பிரமாண வாக்கு மூலத்தில் எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லை என சொல்லி உள்ள நிலையில் அதை எடுத்துக்காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 7/3/2017 ஆம் தேதி நான் தான் பிரதிவாதிகளிடம் ஆறு லட்சம் கிரைய தொகை பேசி 4 லட்சம் முன் பணமாக பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. பொதுவாக நான் ஒரு பத்திரத்தில் என்ன ஏது என விசாரித்து தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான்.
2. நான் 07.03.2017 ல் ஒப்பந்தம் ஏற்படுத்திய பிறகு மீதி கிரைய தொகையான 2 லட்சத்தை பெற்றுக்கொண்டு 22/11/2017 ஆம் தேதி வா.சா.ஆ. 4 ன் கீழ் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல.நான் எனது பிரமாண வாக்குமூலத்தின் வழக்கு சொத்தானது தற்போதைய மதிப்பு 50 லட்சம் என சொல்லி உள்ள நிலையில் அதை எடுத்துக்காட்ட அரசு வழிகாட்டு மதிப்பீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லி உள்ளது போல் சுப்பிரமணியத்திடம் 4 லட்சம் கடன் வாங்கி கிரைய ஒப்பந்தம் போட்டதாக சொல்லி உள்ளதும் அதன் பிறகு மீதி மீண்டும் இரண்டில் நிறைய பத்திரம் எழுதிக் கொடுத்ததாக சொல்லி உள்ளது முற்றிலும் தவறான சங்கதி நான் எனது முழு மனதுடன் சொத்தை விற்க வேண்டி தான் கிரைய ஒப்பந்தம் போட்டு அதன் அடிப்படையில் ஏற்படுத்தி கொடுத்தேன்

என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதிகளின் தந்தையான சுப்பிரமணியம் 8/12/2020 ஆம் தேதி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணியம் உயிருடன் இருந்த காலத்தில் கிரைய பத்திரத்தை ரத்து செய்யவோ அல்லது கிரைய பத்திரத்தை கேள்வி கேட்டோ எந்த விதமான சட்ட நடவடிக்கையும் நான் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. இதுவரை என்னை ஏமாற்றி கிரயம் பெற்றதாக காவல் நிலையத்தில் எதுவும் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி 2017 கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ள நிலையில் அது குறித்து 2022–ல் வழக்கு தாக்கல் செய்துள்ளது காலவரை சட்டத்தின் கீழ் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது எனவே அதன் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது கணவர் பெயர் ராமசாமி என்றால் சரிதான். மேற்படி ராமசாமியின் தந்தை பெயர் எதுவென்றால் பழனிச்சாமி ஆகும். வா.சா–ஆ. 3 கிரைய ஒப்பந்தத்தில் முதல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள ராமசாமிக்கும் எங்களுக்கும் எந்த விதமான முன்விரோதம் இல்லை என்றால் சரிதான். வா.சா–ஆ. 4 கிரைய பத்திரத்தில் சாட்சி கையப்பம் செய்துள்ள கண்ணனுடன் எங்களுக்கு எந்த விதமான முன்விரோதமும் இல்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக எனது பிரமாண வாக்குமூலத்தில் 22/11/2017 ஆம் தேதி கிரைய ஒப்பந்த பத்திரம் என சொல்லி சுப்பிரமணியம் கிரைய ஆவணம் தயாரித்துள்ளதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்த போது மேற்படி பத்திரம் கிரைய பத்திரம் தான் என எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

4. அவ்வாறு எனக்கு கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டது எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் கொரோனா காலத்தில் 2020 ல் எனது கணவர் மருத்துவமனையில் இருந்த போது எனக்கு தெரிய வந்தது. நான் சொல்வது தவறு என்றும் நான் கிரயம் எழுதிய போது நான் எழுதிக் கொடுப்பது கிரைய பத்திரம் என்று எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கான பட்டா சிட்டா போன்ற வருவாய் ஆவணங்கள் அனைத்தும் நான்காண்டுகளுக்கு முன்பு பிரதிவாதிகள் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வருவாய்துறை ஆவணங்களில் பிரதிவாதிகள் பெயர் மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நான் ஏதேனும் ஆட்சேபனை

தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. தற்போது பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தில் விவசாயம் பார்த்து வருகிறார்கள் என்றால் இல்லை. தற்போது பிரதிவாதிகள் சுவாதீனத்தில் தான் வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். நான் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தை செல்லாது என விரும்புகிறேன் எனக்கு எந்த வகையிலும் தகுதி இல்லை நான் கூறியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.